**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 120 **நாள்**: 27.02.2026

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பிராட்வே, டேவிட்சன் தெருவில் ரூ. 27.50 கோடி மதிப்பீட்டில் 30 இலட்சம் கொள்ளளவு திறனுடன் அமைக்கப்பட்டு வரும் நீர்த்தேக்கத் தொட்டிகளில், முதற்கட்டமாக கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைத்தனர்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பிராட்வே, டேவிட்சன் தெருவில் மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவற்றின் சார்பில் ரூ. 27.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் தலா 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில், முதற்கட்டமாக கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை இன்று (27.02.2026) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, திட்ட செயலாக்கம் குறித்த மாதிரி வடிவமைப்பினை பார்வையிட்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான குடிநீர் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்ணடி, கிளைவ் பேட்டரி, ஜார்ஜ் டவுன் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையிலும் சீரான குடிநீர் வழங்கிட ரூ.27.50 கோடி மதிப்பீட்டில் தலா 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் குழாய்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலமாக இப்பகுதியில் உள்ள 70 ஆயிரம் மக்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் திருமதி பர்வீஸ், தலைமை பொறியாளர் திரு.ராதாகிருஷ்ணன், மண்டலக்குழுத் தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திரு.வெ.பரிமளம், திரு.எம்.இசட். ஆசாத் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**